(6) AMENDMENT TO THE MADRAS CULTIVATING TENANTS PROTECTION RULES, 1955, BY SRI M. KALYANASUNDARAM—FURTHER CONSIDERATION.

Mr. SPEAKER : We shall now continue the discussion on item VI, namely, amendment to the Madras Cultivating Tenants Protection Rules, 1955, by Sri M. Kalyanasundaram. The hon. Member is not in his seat. I must inform the House that according to rules however much hon. Members may discuss the motion, it will be deemed to have been withdrawn if the hon. Member Sri Kalyanasundaram is not in his seat when the question is put to the House.

Sri N. K. PALANISAMI : I want to refer to ever so many defects in the rules. I will point out those defects. Then the motion may be treated as withdrawn as the hon. Member is not in his seat.

Mr. SPEAKER : The hon. Member should confine himself to the subject of the amendment moved by the hon. Member Sri Kalyanasundaram. He cannot raise new points or suggest new amendments. The hon. Member Sri Kalyanasundaram has referred only to Rules 6-D, 7, 8 and 13. Hon. Member Sri Palaniswamy should confine his remarks only to those rules.

Sri N. K. PALANISAMI : கனம் சபாநாயகர் அவர்களே, பொதுவாக குத்தகைக்காரர்களை நிலத்தை விட்டு வெளியேற்றக் கூடாது என்ற சட்டத்தை சர்க்கார் நல்ல எண்ணத்துடன் நிறைவேற்றியிருந்தாலும் இப்பொழுது இருக்கக் கூடிய சூழ்நிலையை கவனித்தால் எங்கு பார்த்தாலும் நடைமுறையில் இந்தச் சட்டத்தின் மூலமாக அநேக குத்தகைதாரர்களை நிலத்தை விட்டு வெளியேற்றி வருகிறார்கள். அவர்களைப் பாதுகாக்கக் கூடிய நிலைமையில் இருக்க அவர்களை வெளியேற்றுகிறார்கள். இந்தச் சட்டத்தின் மூலமாகவே, அதாவது இதை ஒப்புக்கொண்டால், சர்க்காரே அவர்களை நிலத்தை விட்டு வெளியேற்றக் கூடிய நிலை ஏற்படுகிறது. உதாரணமாக குத்தகைதாரர்கள் பூமியை ஒரு மிராசுதாரரிடம் உழுதுகொண்டிருக்கிறார் என்றால் அந்த மிராசுதார் அந்தக் குத்தகைதாரரை எப்படியாவது வெளியேற்ற வேண்டும் என்று விரும்புகிறான். அதற்காக மிராசுதார்கள் போலீஸ்காரர்களை அணுகுகிறார்கள். அர்களுடைய உதவியைக் கொண்டு ஒருவிதமான தகராறும் இல்லாமல் இருந்தாலும் ஏதோ தகராறுகள் இருக்கின்றன என்று சொல்லி குத்தகைதாரர்களை எப்படியாவது மிராசுதார்கள் வெளியேற்றுகிறார்கள். இப்பொழுதுள்ள சட்டத்தின்படி எப்படியாவது தகராறுகள் இருக்கின்றன என்று சொல்லி செக்ஷன் 145-படி உத்தரவு வாங்கி வந்து வெளியேற்றுகிறார்கள். மிராசுதார்களுக்கு அனுகூலமான உத்தரவு கிடைக்கா விட்டால் அதன் பிறகு ஹைக்கோர்ட்டுக்குக் கூட மிராசுதார்கள் போய் குத்தகைதார்களை வெளியேற்றுகிறார்கள். அப்படி ஹைக்கோர்ட்டுக்கு போக விவசாயிகளால் முடியவில்லை. மிராசுதார்கள் எப்படியாவது ஹைக்கோர்ட்டுக்குப் போய் தீர்ப்பு வாங்கி வந்து விடுகிறார்கள். மிராசுதார்களால் எது வேண்டுமானாலும் செய்து கொள்ள முடிகிறது, அப்படி விவசாயிகளால் முடிவதில்லை. இதற்காக, குத்தகைதாரர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று சொல்வதற்காகத்தான் . . .

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் கலியாணசுந்தரம் அவர்கள் பிரேரேபித்த திருத்தங்கள் இரண்டும் 6 (டி) யைப் பற்றியது. ஆனால் கனம் அங்கத்தினர் பேசுவதெல்லாம் ரூல்கள் 7, 8-ஐ பற்றி. ஆகவே கனம் அங்கத்தினர் எந்தத் திருத்தத்தைப்பற்றி

27th June 1957] [Sri M. Bhaktavatsalam]

பேசுகிறுர் என்பதை முதலில் தெரிந்து கொள்ளவேண்டியதாக இருக்கிறது. அப்படித் தெரிந்தால் தான் பதில் சொல்வதற்கு தயார் செய்து கொண்டு பதில் சொல்வதற்கு சௌகர்யமாக இருக்கும்.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் ரூல் 6-ஐப்பற்றி தான் பேச வேண்டியது.

SRI N. K. PALANISAMI : எல்லா ரூல்களையும்தான் திருத்தவேண்டும் என்று சொல்லுகிறேன்.

MR. SPEAKER : ரூல் 6-ன் திருத்தத்தைப்பற்றி தான் பேசவேண்டும். அப்படி பேசுவதற்கு ஒன்றும் இல்லாவிட்டால் திருத்தத்தை வோட்டுக்கு விட்டு தீர்மானமாகக் கொண்டு வந்து விடுகிறேன். இப்பொழுதுள்ள திருத்தம் 15 நாட்கள் என்றிருப்பதை ஒரு மாதமாக்க வேண்டும் என்று சொல்லுகிறுர். அது தான் திருத்தம். He wants "15 days" to be changed to "one month."

SRI N. K. PALANISAMI : 15 நாட்களுக்கு பதிலாக ஒரு மாதம் என்று திருத்தம் கொடுத்ததன் நோக்கம் இப்பொழுது இருக்கக் கூடிய விவசாயிகள் குத்தகைதாரர்கள் படக்கூடிய கஷ்டங்களை எடுத்துச் சொல்வதற்குத்தான். வேண்டிய திருத்தங்கள் இல்லாமல் இருப்பதால் தான், இப்பொழுது இருக்கக் கூடிய சட்டத்தை வைத்துக்கொண்டே வெளியேற்றுகிறுர்கள் என்று சொல்வதற்காகத் தான், இப்படிப்பட்ட எல்லா விதிகளுக்கும் திருத்தம் செய்ய வேண்டும் என்பதைச் சொல்வதற்குத் தான் இதற்கு திருத்தம் கொடுத்து அதன் மூலமாகச் சொல்ல வேண்டும் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனுல் சர்க்கார் உடனடியாக அங்கங்கு இருக்கக் கூடிய கர்ணம் மணியக்காரர்களுக்கு உத்தரவு அனுப்பி வைத்து யார் யார் பூமியை யார் யார் பார்க்கிறுர்கள் என்பதை கணக்கெடுத்து அனுப்ப வேண்டும் என்ற உத்தரவை அனுப்பவேண்டும். அப்படி கணக்கு எடுத்து விவசாயிகளுக்கு நன்மை செய்ய உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அதன்மேல் தான் குத்தகைதாரர்களையும் விவசாயிகளையும் பாதுகாக்கலாம். இல்லா விட்டால் எப்படிப்பட்ட சட்டங்கள் இருந்தாலும் அது பிரயோசனம் இல்லாமல் போய்விடும். அந்த முறையில்தான் இப்பொழுதுள்ள சட்டம் இருக்கிறது.

அது மட்டுமல்ல. இப்பொழுதுள்ள சட்டப்பிரகாரம் மூன்று நோட்டீஸ்கள் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. ஒன்று மிராசுதாருக்கு, மிராசுதார் வாங்கி தாசில்தாருக்குக் அனுப்ப வேண்டும் என்று இருக்கிறது.

MR. SPEAKER : I am afraid I have got to call the hon. Member to order. Rule 6-D says :—

"In every case of tenancy agreement entered into after 1st October 1956 between a cultivating tenant and a landlord, a lease deed in Form VII shall be executed in triplicate within a fortnight . . ."

கனம் அங்கத்தினர் சொல்வது திருத்தத்தில் இல்லை. "பதினைந்து நாட்கள்" சமாஜாரத்தை மாத்திரம் இப்பொழுது பேசவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

SRI N. K. PALANISAMI : I press the amendment.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தத் திருத்தம், "பதினைந்து நாட்களுக்குப் பதிலாக ஒரு மாதமாக நீடிக்கவேண்டும்" என்பது. அதாவது விதிகள் எப்பொழுது அமுலுக்கு வந்தனவோ,

அதிலிருந்து இரண்டு வாரம் போதாது, ஒரு மாதமாக இருக்கவேண்டும் என்பது திருத்தத்தின் நோக்கம். விதிகள் அமுலுக்கு வந்து இப்பொழுது மூன்று மாதங்களுக்குமேல் ஆகின்றன. எந்தக் குத்தகைதாரரும் பதினைந்து நாள் தவணை போதாது என்று இதுவரை சொல்லவில்லை. ஆகையால், இந்தத் திருத்தத்திற்கு அவசியம் இல்லை என்று நான் கூறுவேன்.

MR. SPEAKER: According to the rules, if a member who moves an amendment is not in his seat when the question is put to the House the amendment will be deemed to have been withdrawn. So, the opposition of Sri N. K. Palanisami does not count. The hon. Member Sri M. Kalyanasundaram not being in his seat, the amendment is deemed to have been withdrawn.

(7) AMENDMENTS TO THE MADRAS CULTIVATING TENANTS (PAYMENT OF FAIR RENT) RULES, 1956, BY SRI M. KALYANASUNDARAM—FURTHER CONSIDERATION.

Rule 7.

SRI N. K. PALANISAMI: I press the amendment.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இந்த விதிகளெல்லாம் ஹைகோர்ட்டாரைக் கலந்துகொண்டு அமைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் திருத்திக் கொடுத்ததன் பேரிலும், அவர்களுடைய யோசனையின் பேரிலும் இந்த விதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இவ்விதிக்குத் திருத்தம் எதும் அவசியமில்லை என்று நான் கூறுவேன்.

MR. SPEAKER: The hon. Member Sri M. Kalyanasundaram not being in his seat, the amendment is deemed to have been withdrawn.

Rule 8.

MR. SPEAKER: The amendment has already been moved. If any hon. Member wants to speak, let him speak. Otherwise, the Hon. Minister will reply.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஹைகோர்ட்டாரைக் கலந்து கொண்டே விதிகள் அமைக்கப்பட்டிருப்பதால், இவ்விதிக்கும் மாறுதல் எதும் அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்.

MR. SPEAKER: The hon. Member Sri M. Kalyanasundaram not being in his seat, the amendment is deemed to have been withdrawn.

Rules 13 *and* 16.

THE HON. SRI M. BHAKTHAVATSALAM: இந்தத் திருத்தங்களையும் நான் எதிர்க்கிறேன்.

MR. SPEAKER: The hon. Member Sri M. Kalyanasundaram not being in his seat, the amendments are deemed to have been withdrawn.